**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | **திரு. இளங்கோவன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.11.2023**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரிகள் 1,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் பேரையூர் தாலுகா, சாப்டுர் அருகில் உள்ள பழையூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 23.09.2016 ம் தேதியன்று சாப்டுர் கண்மாய் முன்பாக, மதியம் சுமார் 01.00 மணியிலிருந்து 1.30 மணிக்குள், எனக்குத் தெரிந்த பன்னீர்செல்வம் என்பவர் ஓட்டி வந்த

மோட்டார் சைக்கிளில், ஈஸ்வரன் என்பவரை பின்னால் உட்கார வைத்து, பழையூரை நோக்கி ஓட்டிச்சென்றார் என்றும் இவர்களைத் தொடர்ந்து, இன்னொரு பைக்கில் 20 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் 2 பெண்களை மோட்டார் சைக்கிளில் உட்கார வைத்து பின்னால் சென்றனர் என்றும் அப்போது நான் பன்னீர்செல்வத்தைப் பார்த்து கை அசைத்தேன் என்றும் ஆனால் பன்னீர்செல்வம் அதை கவனிக்கவில்லை என்றும் ஈஸ்வரன் என்னை கவனித்தார் என்றும் இரண்டு மோட்டார் சைக்கிளும் பழையூரை நோக்கி சென்றார்கள் என்றும் வழக்கமாக அந்த வழியில் மோட்டார் பைக்கில் செல்வபர்கள் செல்லமாட்டார்கள் என்றும் சாலை மார்க்கமாகத்தான் செல்வார்கள் என்றும் எனக்கு ஏற்கனவே நன்கு தெரிந்த பன்னீர் செல்வத்தையும், ஈஸ்வரனையும், அவர்களைத் தொடர்ந்து 20 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபரையும் எனக்கு நன்கு தெரியும் என்றும் கடந்த 04.10.2016 ம் தேதியன்று பேரையூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் அப்போது நான் மேற்படி விபரங்களைச் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது உண்மைக்குப் புறமாக மாறுபட்டு சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனக்குத் தெரிந்த நபர்கள் என்றும் அவர்களை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதால் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

## IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | **திரு. ராமகிருஷ்ணன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.11.2023**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரிகள் 1,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் பேரையூர் தாலுகா, சாப்டுரில் குடியிருந்து வருகிறேன். டாஸ்மாக் கடையில் (கடை எண்.5541) விற்பனையாளராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எதிரிகள் என் பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள் என்பதால் எனக்குத் தெரியும். எனது கடையில் அதிகமான நபர்கள் மது வாங்குவது வழக்கம். இந்த வழக்கின் எதிரிகள் மது வாங்கினார்களா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 23.09.2016 ம் தேதியன்றுமதியம் சுமார் 12.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் நான் வேலை பார்க்கும் ஒயின்ஷாப்பிற்கு வந்து 4 பிராந்தி பாட்டில்கள் வாங்கி துண்டில் சுற்றி கட்டிச் சென்றார்கள் என்பதால் எனக்கு எதிரிகளை ஞாபகம் உள்ளது என்றும் அப்போது பழையூரைச் சேர்ந்த முத்துப்பிள்ளை மகன் ஈஸ்வரனும், பரஞ்சோதி என்ற செல்லைய்யா மகன் கிடாசெல்வம் என்ற பன்னீர்செல்வமும் ஒரு மோட்டார்சைக்கிளில் வந்து என் கடை முன்பு நிறுத்தி, பீர் பாட்டில் வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு 04.10.2016 ம்தேதியன்று பேரையூர் காவல் ஆய்வாளர் எங்கள் கடைக்கு வந்து விசாரித்தபோது, கிடாசெல்வமும், பன்னீர்செல்வமும் எங்கள் கடையில் பீர் பாட்டில்கள் வாங்கிய விபரத்தைச் சொன்னேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊர்காரர்கள் என்றும் எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 7** |
| **Name** | **:** | திரு. செல்வம் |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.11.2023**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரிகள் 1,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் பேரையூர் தாலுகா, சாப்டூரில் குடியிருந்து வருகிறேன். சாப்டூர் வடகரைபட்டியில் செல்வம் என்ற பெயரில் ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 23.09.2016 ம்

தேதியன்றுமதியம் சுமார் 12.30 மணியிலிருந்து சுமார் 01.00 மணிக்குள் ஆஜர் எதிரிகள் எனது ஹோட்டலுக்கு வந்து, 5 பரோட்டாவும், 3 ஆம்லெட்டும் வாங்கிச் சென்றார்கள் என்றும் அப்போது அவர்களுடன் இரண்டு பெண்கள் உடன் இருந்தார்கள் என்றும் அதனால் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு 04.10.2016 ம்தேதியன்று பேரையூர் காவல் ஆய்வாளர் எங்கள் கடைக்கு வந்து விசாரித்தபோது, மேற்படி விபரத்தைச் சொன்னேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊர்காரர்கள் என்றும் அதனால் எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை